விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- 10 ***Registered as a News paper in Sri Lanka***

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 21 வியாழக்கிழமை (04.04.2002) தொலைபேசி 3378 ஒலி 106

**தனிஸ் ரெக்ஸ்**



சுப முகூர்த்தப் பட்டு சேட்டிங், சூட்டிங், றெடி மேட் ஆடைக ளுக்கு கைராசி

நவாலி றோட், ஆனைக்கோட்டை
**T.P:- 021-2955**

## கரும்புலி மில்லருக்கு இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள முத லாவது கரும்புலி கப்டன் மில்லரின் நினைவுத் தூபியில் இன்று தீபம் ஏற்றி அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வையொட்டி அப்பகுதியில் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள், தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் வடமராட்சிப் பொது மக்களும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட உள்ளனர்.

இவ் அஞ்சலி நிகழ்வில் மாவீரன் மில்லரின் தாயார் நினைவுத் தூபிக்கு தீபம் ஏற்றி வைப்பார். (இ.43)

# இராணுவ-கூட்டுப்படை தளபதிகள் முகமாலைப் பகுதிக்கு விஜயம்

## விடுதலைப்புலிகளுடனும் சந்திப்பு

(பாதுகாப்புச் செய்தியாளர்)

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனர்ல் லயனல் பலகல்லவும், கூட்டுப்படைத் தளபதி றொகான் தளுவத்தவும் நேற்றுக் காலை 10.30 மணிக்கு முகமாலைப் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஏ9 கண்டி வீதி - பாதைதிறப்பது தொடர்பாக பல்வேறு கோணங்களில் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

முகமாலைப்பகுதிக்கு சென்ற இவர்கள் விடுதலைப் புலிகளின் முன்னணி காவலரண் வரை சென்று அவர்களுடன் உரையாடி அங்கு கண்ணிவெடி மீட்கப்பட்ட இடங்களையும், முகமாலை பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகளையும் பார்வையிட் டனர்.

இதற்கு முன்னர் பலாலி இராணுவத்தளத்தில் யாழ் குடா நாட்டுக்கான ஏ9 கண்டிவீதி ஊடான தரைவழிப் பாதையை திறப்பது தொடர்பாக உயர் மட்ட மாநாடு ஒன்றையும் நடத்தியிருந்தனர். இம் மாநாட்டில் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, கூட்டுப் படைத் தளபதி றொகான் தளுவத்த, பலாலி படைத் தளபதி ஸ்ரீலால் வீரசூரியா மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (வ)

## சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து

# நோர்வே பிரதியமைச்சர் பிரபாவுடன் பேசுவார்

## 17ந் திகதிக்கு ஏற்பாடு

(வவுனியா விசேட நிருபர்)

**நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீசன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இம்மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

இச்சந்திப்பின்போது அரசுக்கும் கள் தொடர்பாக நோர்வே பிரதி ஹெல்கீசனும் தாய்லாந்து பேச்

## அமெ.தூதுவருடன் ஈ.பி.டி.பி சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ்சை ஈ.பி.டி.பி. யின் செயலாளரும் எம்.பி.யுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் நேற்று கொழும்பில் சந்தித்து பேசியுள்ளனர்.

இச்சந்திப்பில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத் தாகியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தமது கட்சிக்கு சில விடயங்கள் தொடர்பாக தயக்கம் இருப்பதாகவும் ஒப்பந்த அமுலாக்கத்துக்கு ஈ.பி.டி.பி. ஒருபோதும் தடையாக இருக்காது எனவும் வடக்கு கிழக்கில் சமாதானம் நிலைக்க வேண்டுமெனவும் தூதுவரிடம் சுட்டிக்காட்டினர். (இ)

## தமிழீழக் கடற்பரப்பில் கடற்புலிகளின் படகு உலா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலி விசேட படையணியினர் ஆறு படகுகளில் கடந்த திங்கட்கிழமை சுதந்திரமாக தமிழீழ கடற்பரப்பில் வலம் வந்தனர். தமிழீழ தேசியக் கொடி மற்றும் கடற் புலிகளின்கொடிகளைப் பறக்கவிட்டவாறு கடற் புலிகள் கடலிலே வலம் வந்த காட்சியை பார்த்து ரசித்த கரையோர மக்கள் தமது மகிழ் வை வெளிப்படுத்தும் வகையில் கையை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர். அரசுக்கும் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய நிலையில் கடற் புலிகள் கடற் சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளமை

இச்சந்திப்பின்போது அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து தாய்லாந்தில் இடம் பெறவுள்ள முதற்கட்ட பூர்வாங்க பேச்சுவார்த்தையில் இடம் பெறக்கூடிய முக்கிய விடயங்கள் தொடர்பாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேசவுள்ளார்.

இப்பேச்சுக்களின்போது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் பிரதியமைச்சர் ஹெல்கசனும் தாய்லாந்து பேச்சுக்கள் தொடர்பான முக்கிய முடிவுகளை மேற்கொள்ளவுள்ளதாக அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்..

விடுதலைப் புலிகளின் தலைவருடன் நடத்தப்படவுள்ள பேச் (10ம்பக்கம் பார்க்க)

நிலையில் கடற் புலிகள் கடற் சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ.43)

## மாலைதீவு – இலங்கை
# உதைபந்தாட்ட அணிகள் யாழில் மோதுகின்றன

(யாழ்ப்பாணம்)

மாலைதீவு தேசிய உதைபந்தாட்ட அணியும் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியும் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை மறுதினம் மோதவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக நடைபெறவுள்ள இச் சர்வதேச போட்டித் தொடரில் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளன உப தலைவரும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன முக்கியஸ்தருமான மணிலால் பர்னாண்டோ பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். இப் போட்டிக்கு சங்ஸ்தா சீமெந்து நிறுவனம் முழு அனுசரணை வழங்கியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ்.வேலையற்ற பட்டதாரிகள் நேற்று மறியல் போராட்டம்!

## யாழ் செயலகம் முற்றாக ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் மறியற் போராட்டத்தினால் யாழ் அரச செயலகம் மற்றும் யாழ் பிரதேச செயலகம் ஆகியவற்றின் பணிகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

நேற்றுக்காலை 7 மணிக்கு யாழ் செயலகம் முன்பாக திரண்ட வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் செயலக, மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் கடமைக்கு உள்ளே செல்லமுடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இதனால் செயலக, பிரதேச செயலகப் பணிகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்தன.

புதிய அரசாங்கம் பதவியேற்று இதுவரை தமக்கு நியமனம் வழங்குவது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், இதனை வெளிப்படுத்தும் வகையிலும் வேலைவாய்ப்பை விரைவுபடுத்தவுமே போராட்டத்தை நடாத்த வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டதாகவும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை தமது போராட்டத்துக்கு சாதகமான பதில் கிடைக்காவிடின் குடாநாடு தழுவிய (10ம் பக்கம் பார்க்க)

## கப்பலில் பயணம் செய்ய முடியும்

(யாழ்ப்பாணம்)

இன்று இடம்பெறவுள்ள சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் சேவையில் பயணம் செய்வதற்கு போதியளவு இடவசதி இருப்பதனால் அவசர தேவைக்காக கொழும்பு செல்ல இருப்பவர்கள் இன்று காலை 11 மணிக்கு ப்பயண ஆயத்தங்களுடன் (10ம் பக்கம் பார்க்க)

# சகல அரச ஊழியர்களுக்கும் அடுத்தவருடம் சம்பள உயர்வு

## பிரதி நிதியமைச்சர் பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்தவருடம் முதல் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாக பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள ஊக்குவிப்பு கொடுப்பனவை தொடர்ந்து வழங்குமாறு பிரதமர் ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கும்போது ஏற்படும் மேலதிக செலவி (10ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் மக்கள் வங்கி கணனி மயப்படுத்தப்படும்

## உயர் அதிகாரிகள் குழு யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கி பிராந்திய அலுவலகங்களை கணனி மயப் படுத்துவது குறித்து ஆராய நேற்று கொழும்பில் இருந்து 7 பேர் கொண்ட உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் வந்தனர்.

இக்குழுவினர் தமது யாழ். விஜயம் குறித்தும் வங்கிச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர். மக்கள் வங்கி ஊழியர்கள் பலர் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலில்,

குடாநாட்டுக்கான தரை-9 பாதை திறக்கப்பட்டதும் கடன் அடிப்படையில் இந்தியாவிலிருந்து பஸ்களை இறக்குமதி செய்து யாழ்ப்பாணம் அனுப்புவதென்றும்,

நீண்ட காலக்கடன் அடிப்படையில் யாழ் மக்களுக்கு பஸ் மற்றும் உழவு இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படு மென்றும்,

இவற்றை பெற விரும்புவோர் மக்கள் வங்கிக்கிளையுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் கருத்து தெரிவித்தனர்.

இதேவேளை இக்கலந்துரையாடலில் கொழும்பிலிருந்து யாழ். வந்த எஸ். யூ. குணசேகர, கே. எக்கநாயக்க, டிராச் பத்திரண, இசற்.ஏ.ஐ ஹசன் ஆகியோர் கலந்து கொண்டனர், (இ-10)

## ஸ்ரீலங்கா தேசிய சம்மேளன வர்த்தகப் பிரதிநிதிகள் மற்றோர் குழு வரும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா தேசிய சம்மேளனத்தின் வர்த்தகப் பிரதிநிதிகள் அடங்கிய மேலும் ஒரு குழு எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

நேற்று முன்தினம் இருநாள் விஜயம் மேற்கொண்ட 54 பேர் அடங்கிய ஸ்ரீலங்கா தேசிய சம்மேளனக் குழுவின் வர்த்தகம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் பூர்த்திபடைந்த பின்னரே மற்றைய குழுவினர் வருகைதரவுள்ளதாகவும் சம்மேளனத் தலைவர் சந்திரா ஜேஎம்புல் தெனியதெரிவித்தார். (உ-10)

ஊழியர் கடமை குறித்து

## வர்த்தகர் சங்கம் ஆலோசனை வழங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கங்களினதும், ஊழியர் சங்கத்தினதும் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் கடந்த 20ம் திகதி யன்று யாழ் சிரேஷ்ட உதவித்தொழில் ஆணையாளர் தலைமையில் மாவட்ட தொழில் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஊழியர்களின் வேலை நேரம், மேலதிக வேலைசெய்வதற்கான மேலதிக ஊதியம் விடுமுறை, லீவு வழங்கல், உரிய பதிவேடுகளைப் பேணுதல், ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களித்தல் சம்பந்தமாக சிரேஷ்ட உதவித் தொழில் ஆணையாளர் இ. தர்மலிங்கத்தினால் இக்கலந்துரையாடலில் விளக்கமளிக்கப்பட்டது.

வர்த்தக சங்கம் தங்கள் அங்கத்தவர்களை தொழிற் சட்டங்களை அனுசரித்து நடப்பதற்கு ஊக்குவிக்கவும், ஊழியர் சங்கமும் தங்கள் அங்கத்தவர்களை தொழிற் சட்டங்களை அனுசரித்து நடப்பதற்கு ஊக்குவிக்கவும், அவர்களது கடமைகள் பற்றி ஆலோசனை வழங்கும் என்றும் இணக்கப்பாடு எட்டப்பட்டதுடன்.

ஊழியர்களுக்கு கிழமைக்கு ஒருநாள் விடுமுறை வழங்கும் நோக்கமாகவும், ஊழியர்களுடைய கடைகளுக்கும், ஊழியர்கள் அற்ற கடைகளுக்கும் இடையே யுள்ள வியாபாரப் போட்டி நீக்குவதற்காகவும் எல்லாக் கடைகளையும் ஏனிக்கிழமைகளில் அரை நாளும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் பூட்டிவைப்பதற்கான ஒரு ஒழுங்கு முறைமை ஏற்படுத்தப்பட வேண்டுவதுடன் எல்லோரும் இதற்கு ஒத்துழைத்தல் வேண்டும். இதற்கான ஒரு இணைந்த திட்டத்திற்கு வர்த்தக சங்கத்தினராலும், தொழிற்திணைக்களத்தினராலும் இணக்கம் காணப்பட்டது. (உ)

## 8 கிராம சுகாதார உதவியாளர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

கின்றார்கள்.

---

சிறு விளம்பரம்

### OL MATHS

கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும்இதுவரைசித்தியடையாதவர்களுக்கும் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் **Distinction** பெறுபேறடையக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00-9.00 க.ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்குஒழுங்கை சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம். (4919)

### தேவை

ஆங்கிலக் கல்வி நிறுவனமொன்றில் தரம் ஆறு இற்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு பயிற்றப்பட்ட பெண் ஆசிரியர் தேவை. கையெழுத்து சுயவிபரக் கோவையுடன் 10 4.2002 இற்கு முன் விண்ணப்பிக்கவும் கோ. சுப்பிரமணியம், இல 62 பழம் றோட் சுந்தர்மடம், யாழ்ப்பாணம் (4920)

### தேவை

ஓய்வூதியம் பெறும் குடும்பம் ஒன்றை வைத்திருந்து கவனிப்பதற்கு (சமயல்உட்பட)ஒருநடுத்தர வயது உடைய பெண்பிள்ளை தேவை நற்குணமும் நேர்மையும் பொறுமையும் சமயல்அனுபவமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல-244 யேபா-வல புரி யாழ்ப்பாணம் (4923)

### தவறிவிட்டது

கதிரமலைநாதன் குகன் நெல்லண்டை தும்பளைபருத்தித்துறை என்பவருடைய விசேட அடையாளஅட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் வைவத்தீஸ்வரன் மெடிக்கல்,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் T.P2501 (4924)

### மறியல்போராட்டம் தொடர்கிறது

(உடுவில்)

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் மறியல் போராட்டம் நேற்றுடன்10ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (உ-129)

---

### பெறுமதி வாய்ந்த முத்திரைகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பாண பிரதம தபாலகத்திற்கு 500, 1000 ரூபா பெறுமதி வாய்ந்த முத்திரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இம் முத்திரைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பிரதம தபாலதிபர் எஸ் மார்க் கண்டன் தெரிவித்துள்ளார். (உ)

### கணனிகள் அன்பளிப்பு

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு உலக வங்கியின் அனுசரணயுடன் மூன்று கணனிகள் தகவல தொழில்நுட்ப கல்வி யின் வளர்ச்சி கருதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (உ-201)

### 7இலட்சம் வீடுகள் அமைக்க கோரிக்கை

(கொழும்பு)

வீடற்றவர்களிற்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக 7 லட்சம் வீடுகளை அமைக்க வேண்டும் என்று வீடமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற வீடமைப்பு அமைச்சின வரவு செலவுத்திட்டக்குழு விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (உ)

### வருடாந்த மஹோற்சவம்

(மந்திகை)

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் பி.ப 2 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (எ-23)

### காசநோய் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் காசநோய் தொடர்பானகருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. (உ)

### தென்னை வள கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கைதடி கமநலசேவை நிலையத்தில் தென்னைவள அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கொன்று எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 00 மணிக்கு தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-19)

### பனைவளக் கண்காட்சியும் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்துள்ள பனை உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும், போட்டியும் யாழ். பரியோவான் கல்லூரியில் எதிர்வரும் 7, 8, 9 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணிக்கு

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை,

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

## வணிகமுதற்தேர்வு 2000 துணைப்பாடங்கள்

மேற்படி வணிக முதற் தேர்விற்கான கீழ்வரும் துணைப்பாடங்கள (**Ancillary Subjects**), 22.04.2002 தொடக்கம் ஆரம்பமாகவுள்ள கலை முதற்தேர்வு 2000 உடன் இணைந்து நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

1. அளவையியலும் விஞ்ஞான முறையும்
2. சூழற் கல்வி
3. சமூக உளவியல்
4. குடித்தொகைக்கல்வி

வணிக முதற்தேர்வு - 2000 இற்குரிய பிரதான பாட நேரஅட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

02.04.2002 (கி-3808) பதிவாளர்

பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்துள்ள பனை உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும், போட்டியும் யாழ். பரியோவான் கல்லூரியில் எதிர்வரும் 7, 8, 9 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்னாவும், இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

## சிரமதானப் பணி மேற் கொள்ளப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் பொன் விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் குருநகர் 5 ஆம் வட்டாரத்திலுள்ள சென்றோக் சனசமூக நிலையப் பகுதி, மற்றும், தொடர்மாடிப் பகுதிகளில் நடமாடும் சுகாதார சேவையும் சிரமதான பணியும் நடைபெற்றது.

யாழ். மாநகர மேயர் எஸ்.கந்தையன் தலைமையில் இச் சேவை காலை 6.00மணி முதல் மாலை வரை இடம்பெற்றது.

இவ் நடமாடும் சேவையில் சுகாதார உத்தியோகஸ்தர்கள், குடும்பநல உதவியாளர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(இ)

## 8 கிராம சுகாதார உதவியாளர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கடமையாற்றுவதற்கு எட்டு கிராம சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி உதவியாளர்கள் நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, புளியங்கூடல், காரைநகர் ஆகிய இடங்களில் தற்பொழுது கடமையாற்றிவருகின்றார்கள்.

இதன்மூலம் பொதுமக்களின் சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குதீர்வு காண்பது இலகுவாக இருப்பதாகவும்,

எனினும் இவ் வைத்தியப் பிரிவில் 25 கிராம சுகாதார உதவியளர்களுக்குவெற்றிடம் இருப்பதாகவும் தெரியவருகின்றது. (உ-75)

## ஆட்சேர்ப்பு நேர்முகதேர்வு அனுமதிக்கடிதம் தாமதம்

### யாழ் மாவட்டத்தவர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

துணை மருத்துவ சேவை ஆட்சேர்ப்புக்கென கொழும்பில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தவர்கள் பங்கு கொள்ள முடியாமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஆட்சேர்ப்புப் பரீட்சை 2000 ஆம் ஆண்டு ஜூனில்நடைபெற்றது.

அதன் பிரகாரம் மார்ச் மாதம் 16ஆம் திகதி இதற்கான நேர்முகத் தேர்வு கொழும்பிலுள்ள சுகாதார சேவைத் திணைக்களத்தில் நடைபெற்றது.

இருப்பினும் நேர்முகத் தேர்வுக்கான அனுமதிக்கடிதம் நேற்றுமுன்தினமேயாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் கைகளில் கிடைத்துள்ளது.

இது குறிந்து சம்பந்தப்பட்டவர்கள் ஏமாற்றமும் கவலையும்வெளியிட்டதுடன் உரியதரப்பினர் இதுவிடயத்தில் சாதகமான பதிலைத் தர வேண்டும் எனவும்கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-10)

# தென்மராட்சி உதவி அரச அதிபர் பிரிவு
# 1.8 மில்லியன் செலவில் அபிவிருத்தி

(கொழும்பு)

2000மே மாதத்தில் பெரும் அழிவுகளைச் சந்தித்த தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 1.8 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது.

கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முடிவுற்றதும் பொருளாதார உட்கட்டமைப்பு, சமூக உட்கட்டமைப்பு, உற்பத்தித்துறை என்பனவற்றின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கும்.

2000 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் இங்கிருந்து வெளியேறியுள்ளன.

இத்தகைய ஒரு குடும்பம் மீளக்குடியமர்வதற்கு மீளக்குடியமர்வு அமைச்சின் மூலம் ஆகக்கூடிய தொகையாக 65 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்தின் தேவையையும் மதிப்பிடும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கும்.

மீளக் குடியமர்பவர்களின் கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற பிரச்சினைகளுக்கு 240 மில்லியன் செலவிடப்படும்.

போர் நிறுத்த ஒப்பந்தம் செய்தபின் இது வரை சுமார் 7 ஆயிரத்து 500 குடும்பங்கள் மீண்டும் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## நிரந்தர வெளிநாட்டுக் கொள்கை அவசியம்

### கதிர்காமர் வலியுறுத்துகிறார்

(கொழும்பு

இலங்கைக்கென நிரந்தரமான வெளிநாட்டுக்கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான நிரந்தரமான கொள்கை ஒன்றை வகுப்பதன் மூலம், சர்வதேச ரீதியாக நாட்டை பொருளாதார அபிவிருத்தி ரீதியில் கட்டியெழுப்புவதற்கும்,

சீனா, பாகிஸ்தான்போன்ற நாடுகளுடன் இலங்கைக்கான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கும் உதவும்எனத் தெரிவித்த அவர்,

நிரந்தரக் கொள்கை ஒன்றை அரசாங்கம் வகுக்க முன் வருமானால் அதற்கு தான் பூரணவாதரவளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## க.பொ. த. (சா த)பரீட்சை யூனியன் கல்லூரி மாணவர் 93 வீதமானோர் சித்தி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த யூனியன் கல்லூரியில் இருந்து, கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த (சா-த) பரீட்சைக்குத் தோற்றிய 70 மாணவர்களில் 65 மாணவர்கள் க.பொ.த (உ-த) கற்க தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 6 பாடங்களில் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை, ஆங்கிலம், சித்திரம் ஆகிய பாடங்களின் பெறுவேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் பாடசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (உ-129)

## மைற்ஸ் நோய் தடுப்பு திட்டம் கைவிடும் நிலையில்

(யாழ்ப்பாணம்)

மைறஸ் நோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு இவ்வருடம் நிதி ஒதுக்கப்படாமையால், மேற்படி திட்டம் கைவிடப்படும் நிலையிலுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த வருடம் அமுல்ப்டுத்தப்பட்ட இத் திட்டத்தின் மூலம், தென்னைகளைத் தாக்கும் மைற்ஸ் நோய்த் தாக்கம் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது.

இருந்தபோதும், இவ்வருடம் நிதி ஒதுக்கப்படாமையினால் இத் திட்டத்தைக் கைவிடும்நிலை ஏற்பட்டுள்ளதுடன், மேற்படி நோய்த் தாக்கம் இனிவரும் காலத்தில் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-19)

## காரைநகரில் இருந்து

## அடிப்படை வசதியில்லை

(காரைநகர்)

காரைநகர் பல காட்டுப்பகுதியில் மக்களை மீளக்குடியமர படையினர் அனுமதித்த போதிலும், அங்கு அடிப்படை வசதிகள் இல்லாதிருப்பதால் மக்கள் மீளக்குடியமர்வதில் ஆர்வமின்றி இருப்பதாக கூறப்படுகிறது.

இப்பகுதி கிராம சேவையாளர் மூலமாக 215 குடும்பங்கள் மீளக்குடியமர விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், பஸ்சேவை, மின்சாரம், நீர்வசதி என்பன அங்கு ஏற்படுத்தப்படாததுடன், மக்களின் வீடுகள் பலவும் குடியிருக்க முடியாத அளவுக்கு இடித்து தரைமட்டமாகியிருப்பது குறித்தும் சம்பந்தப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். (உ-246)

## கற்கடதீவு புனிதஅந்தோனியார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கற்கடதீவுபுனிதஅந்தோனியார் யாத்திரைத்தல வருடாந்த திருவிழா இம்மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் 9 30 மணி வரை திருப்பலியும், புனிதரின் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

திருவிழாவை ஒட்டி நெடுந்தீவில் இருந்து சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை

## கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை முன்னணிப்பெறுபேறுகள்

(நேற்றைய தொடர்ச்சி

(யாழ்ப்பாணம்)

கடந்தவருடம் இடம்பெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு நேற்றுமுன்தினம் கிடைத்துள்ளன.

முன்னணிப் பாடசாலைகள் சிலவற்றின் பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு,

யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

பா. சஜேந்தினி - 10 ஏ ஜெ. ஜனனி - 10 ஏ க. மஞ்சுளா -10 ஏ

ஜெ. பிரதீபா- 9ஏ, பி, ர.கீர்த்திகா-9ஏ, பி, ச.மயூரதி 9ஏ, சி, எ. நிலாந்தி 8ஏ, பி, எஸ், ஞா. பிரமிலா 8ஏ, பி, எஸ்,

ப. நிருஷாந்தி, 8ஏ, பி, சி, சி. சிந்துஜா- 8ஏ, 2சி, ஸ்ரீ. அம்பிகா- 8ஏ, 2சி, த. தனேந்தினி- 8ஏ, பி, சி, த. காயத்திரி- 8ஏ, பி, சி, வி. கிருஷியா- 8ஏ, பி, சி,

ஜெ. சிவசைலஜா 7ஏ, 2பி, எஸ், ச. சுகன்ஜா 7ஏ, பி, சி, எஸ், க. நிலானி 6ஏ, பி, 3சி, க. தர்மினி- 6ஏ, 2பி, சி, எஸ், கு. நிஷாபிருந்தினி 6ஏ, 2பி, சி, எஸ், ச. ஜெயசக்தி 6ஏ, 2பி, சி, எஸ், சி. பிரியந்தி 6ஏ, 3பி, எஸ், சு. தனுஷ்கா 6ஏ, 2பி, 2சி

பா. தட்ஷாயினி-5ஏ, 3பி, சி, எஸ், ஜெ. நீருஜா-5ஏ, 3பி சி, டபிள்யு, ந. கிருத்திகா-5ஏ, 4பி, சி, ச. மேரி-5ஏ, 3பி, சி, எஸ், சு. வைதேகி- 5ஏ, பி, 4சி,

த. சுகன்ஜா-5ஏ, 4பி, எஸ் தி. அபிராமி-5ஏ, 3பி, 2சி, ம. அனுஜா -4ஏ, 2பி, 3சி; டபிள்யு, ர. பிருந்தா4ஏ, 5சிடபிள்யுசெ. ருத்ஷாலினி4ஏ 2பி, 4சி, சி. தர்ஷிலா-4ஏ, 3பி, 2சி, எஸ், உ, தர்ஷிகா-4ஏ, 4பி 2சி, வே. றீட்டா பிரியதர்சினி 4ஏ, 3பி. 2சி, எஸ்

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

த. ஜெனோ, 10 ஏ, வி. முகிர்தினி-10 ஏ கு. கஜேந்தினி- 9ஏ, பி, செ. அனுஷா- 9ஏ, பி, இ. ராமவித்யா-9ஏ, சி இ. தக்ஷி- 9ஏ, பி, சி. துஷிக்கா- 9ஏ, எஸ்.

பு. வர்மிலா- 9ஏ, பி, சி. ஹம்சிதா 9ஏ, சி, ம. மயூரா-9ஏ, பி, ப. ஜனனி 9ஏ, சி, ச. லாவண்ஜா- 9ஏ, சி, ப. நிர்சாந்தினி9ஏ, சி, ர. ரஜனிகா- 9ஏ, சி, க. விஜித்தா- 9ஏ, சி, மு. ஷோபனா- 9ஏ, பி, ந. வின்னிசாளினி- 9ஏ, பி,

ம. அனுப்பிரியா- 8ஏ, 2பி, சி. மயூரி-8ஏ, 2சி, சி. சாளினி

ச. சயந்தூரன் எ, 4பி 4சி, எஸ், இ. கிருஷ்ணகுமார், 3எ 4சி 3எஸ், சா. தயாகரன் 3எ, பி, 4 சி, ந. இராமநந்தினி 2எ, பி 5சி, 2எஸ், ஆ. சுசிகரன் 2எ 2பி 3சி 2எஸ், க. சந்திரவதனா 2எ 6சி 2எஸ், ந. சர்மிளா 2எ பி, 4சி 2எஸ், ப. பவித்திரா எ, 2சி, 7எஸ்,

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

ச. லக்மன்8ஏ 2பி பா. டினேஸ் 8எ 2சி, பா. டிலீபன் 7எ 2பி சி, ச. கல்பனா 5 எ 2பி 2சி, ஸ்ரீ. பாமினி 4 எ பி 4சி, எஸ்

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி

ஜெ. சாளினி 8எ, 2பி, ச. சிவகௌரி 5எ, 2பி 3சி பா. ஸ்ரீ. ரோகினி- 4எ, பி, 5சி க. மஞ்சுபாகினி 4எ, 3பி 3சி, செ. மயூரா 4எ, 3பி, 3சி தி. விதுஜா 3எ, 4பி, 2சி ஸ்ரீ. நித்திலா 3எ, 2பி, 5சிச. தர்மினி 5எ 3சி

இணுவில் மத்தியகல்லூரி

பா. சுரேஸ்கண்ணா 6எ, 3பி, எஸ், சி, கபில்ராஜ் 4எ, 2பி, 4சி.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி

க. கலையரசி10எ, சி. துஷாந்தினி 6 எ, பி, 3சி, க. சத்தியராஜி 6எ, 3சி, க. ஐதுகுலன் 4எ, 3பி, 2சி, எஸ், ஞா. ஜெயதர்சன் 4எ, 2பி, 3சி, எஸ்.

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை

மு விஜிதா எ, பி, 6சி, எஸ், எஸ். பிரியா பி, 3சி 6 எஸ்

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

சு. சசிக்குமார் 2எ, 6சி, 2 எஸ், த. தனராஜ் 2பி, 2சி 4எஸ், கு. ஜெயந்தினி 2பி, 2சி, 3 எஸ்; த. பாமினி பி, 2சி, 6எஸ்

(தொடரும்)

## பொதுக் கூட்டம்

(தென்மராட்சி)

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் நாளை பி.ப.3.00 மணிக்கு யாழ். அரசசார்பற்ற இணையங்களின் ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெற

டுத்தப்பட்ட இத் திட்டத்தின் மூலம், தென்னைகளைத் தாக்கும் மைற்ஸ் நோய்த்

அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-19)

## காரைநகரில் இருந்து தனியார் சிற்றூர்தி சேவை

(காரைநகர்)

காரைநகரில் இருந்து யாழ்-நகருக்கான தனியார் சிற்றூர்திச் சேவை இவ்வாரம் முதல் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தனியார் சிற்றூர்திகள் காரைநகருக்குள் செல்வதானால் படையினரின் அனுமதி பெறவேண்டும் என்ற கடந்த 6 வருடங்களாகவிருந்த நடைமுறை நீக்கப்பட்டதையடுத்தே இச்சேவை இடம் பெறவுள்ளது. (உ-246)

9 30 மணி வரை திருப்பலியும், புனிதரின் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

திருவிழாவை ஒட்டி நெடுந்தீவில் இருந்து சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கும் படகுச் சேவை இடம் பெறவுள்ளது.

திருவிழாவிற்கு வருவோர்கள் உணவு, குடிநீர் என்பவற்றுடன் வருமாறும்நேர்த்திகள் நன்கொடைகள்வழங்குவோர் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

ர. ரஜனிகா- 9ஏ, சி, க. விஜித்தா- 9ஏ, சி, மு. ஷோபனா- 9ஏ, பி, ந. வின்னிசாளினி- 9ஏ, பி,

ம. அனுப்பிரியா- 8ஏ, 2பி, சி. மயூரி-8ஏ, 2சி, சி. சாளினி 8ஏ, 2பி, கு சொரூபா -8ஏ, பி, எஸ். ச. சுமதி- 8ஏ, பி-எஸ், சு. தவசாந்தி- 8ஏ, பி-சி, சீ. தினோஜா- 8ஏ. பி, சி,

ச. பாலநந்தினி- 8ஏ, பி, சி, சி. சிந்துஜா- 8ஏ, பி, சி. வை. சிந்துஜா 8ஏ, பி, சி, சி. சிவதர்சனா 8ஏ, பி, எஸ், அ. மெடோனா- 8ஏ, பி, சி,

பீ. சுபத்திரா- 8ஏ, பி, டபிள்யு, பா. ஞானமொழி- 8ஏ, 2சி, ப. ஜனகா 8ஏ, பி, சி பூ. கனிதா- 8ஏ, 2சி

யாழ். இந்து மகளிர் கல்லூரி

ந. அனிதா 4 ஏ, 5பி, எஸ், ஸ்ரீ. அனோஜனா 4எ. 3பி, 2சி, ரா. கவிதா-4எ, 5பி, சி, பா. தர்மேந்தினி- 4எ, 3பி, 2எஸ், பா. வனஜா- 4எ, 4பி, சி, எஸ். வி. விஜயவதனி- 4எ, 3பி, 2சி, கு. தர்சினா- 4எ, 4பி, சி, எஸ்,

யாழ். மத்திய கல்லூரி

சி. மயூரன் 9எ பி, து. நோவா 9எ, பி, தே. அஜந்தன் 7எ, 2பி சி, ம. மகேந்திரராஜ் 5எ 2பி 2சி, ந. பிரதீபன் 5எ, 3பி, சி, சி. கிரிதரன் 4எ, 3பி, 3சி, க. மயூரன் 4எ 4சி எஸ், கிகிருஷ்ணமேனன் 4எ, 3பி, சிஎஸ், ந. றமணபிரகாஷ் 4எ 3பி சி, எஸ். சுதுமலை சிந்மயபாரதிவித்தியாலயம்

களின் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் நாளை பி.ப.3.00 மணிக்கு யாழ். அரசசார்பற்ற இணையங்களின் ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது,

புலிகளின் வரவு, மற்றும் யாழ். மாவட்டத்தில் இடம் பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு என்பன குறித்து இக கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்மாறு தலைவர் எஸ். பரமநாதன் அறிவித்துள்ளார். (உ-77)

## கூரைத்தகரம் திருட்டு

(வட்டுக்கோட்டை)

மூளாய் கூட்டுறவுவைத்திய சாலையின் கூரை, வேலி என்பவற்றுக்குப் போடப்பட்டிருக்கும் தகரங்கள் தினமும் களவாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-216)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க புலிகள் நிபந்தனை விதிக்கவில்லை

## சமாதானச் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி வரும் அரசு- புலிகள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு புலிகள் தரப்பிலிருந்து நிபந்தனைகள் எதுவும்விதிக்கப்படவில்லை என்று பிரதமரின் அலுவலகத்திலியங்கும் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 22 ஆம் திகதி ஒப்பமிடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் பேச்சுகள் தொடங்குவதற்கான நிபந்தனைகள் யாவும் தரப்பட்டிருக்கின்றன.

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் போன்ற விவகாரங்கள் பின்வரும் பேச்சுக்களின் போது, அதாவது ஜூலை மாதம் வரையில் தீர்மானிக்கப்படும்.

சமாதான நடவடிக்கைகள் இது வரை முறைப்பாடுகள் எதுவுமின்றி முன்னேறி வந்துள்ளன. போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளிருப்பின் அவற்றை கவனிப்பர்.

இவர்கள்ஏற்கனவேவடக்கு கிழக்கில் பணிகளை ஏற்றுள்ளனர். கண்காணிப்பு அலுவலகம் ஒன்று ஏற்கனவே வவுனியாவில் திறக்கப்பட்டுவிட்டது. அடுத்தவாரம்யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, அம்பாறை ஆகிய இடங்களிலும் அலுவலகங்ககள் திறக்கப்படவுள்ளன. இவ்வாறுசமாதானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## வலைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)


பலாலி ஆசிரியர்கலாசாலை மற்றும் யாழ். பல்கலைக்கழக ஆண்கள் அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 4. 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (உ-19)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 06

## பகுதி I

ஆக்கம் – "சாயிகல்வி வட்டம்"
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

கீழே காணப்படும் படத்தை அவதானித்து நீர் காண்பவை பற்றி 5 வசனங்கள் எழுதுக?



1. ........................................................................
2. ........................................................................
3. ........................................................................
4. ........................................................................
5. ........................................................................

(6). பட்டத்தில் A என அடையாளம் இடுக.
(7). பட்டம் விடும் சிறுவனுக்கு வடக்கேயுள்ள வயலில் X என அடையாளம் இடுக.
(8). வீதியோரமாக மரக் கிளையுடன் நிற்கும் விருட்சத்தின் பெயர் என்ன.

சரியான விடையின் கீழ் கோடிடுக.
(9). கற்பக தரு எனப்படுவது (பசு, தென்னை, பனை)
(10) ஒடியலிருந்து தயாரிக்கப்படுவது (கூழ், கஞ்சி, இரசம்)

பின்வரும் விவரணத்தை வாசித்து 11 -15 வரையான வினாக்களுக்கு விடை தருக.

இன்று வெயில் மழையின் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மனிதர்கள் என்னைப் பாவிக்கிறார்கள். ஆதிகாலத்தில் அரசருக்கும், கடவுளருக்கும் கௌரவத்திற்காகப் பிடிக்கப்பட்ட நான் இன்று எல்லோராலும் பிடிக்கப் படுகிறேன். என்னை ஆதி காலத்தில் சத்ரம் என்று அழைத்தனர். முன்பு கறுப்பாக இருந்த நான் இன்று பல வர்ணங்களில் அழகு மிக்க பொருளாக வந்துள்ளேன். என்னை மடக்கிப் பெண்கள் தமது கைப்பைக்குள் வைத்துச் செல்வர். நான் மனிதருக்கு அத்தியாவசிய பொருளாவேன்.


விடை தருக.
(11) இவ்விவரணத்தில் கூறப்படுவது எது?
(12) சத்ரம் என்றால் என்ன?
(13) ஆதி காலத்தில் இது யாருக்குப் பிடிக்கப்பட்டது?

பொருத்தமான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
(14) அத்தியாவசியமானது என்பது
1. முக்கியமானது 2. அவசியமானது
3. அன்றாடம் தேவைப்படுவது
(15) திருவிழாக் காலங்களில் இரவு வேளைகளில் வர்ணக் குடை பிடிப்பது
1. கௌரவத்திற்காக 2. அழகிற்காக 3. வெயிலுக்காக

16-18 வரையான வினாக்களிலுள்ள படங்களில் காண்பிக்கப் படுபவற்றைச் சரியாகக் குறிப்பிடும் வாக்கியத்தின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

22 -24 வரையான வினாக்களுக்கு கோலத்தை அவதானித்து வெற்றிடங்களை நிரப்புக.

22. 23. 24.




25-28 வரையான சொற்களை அவதானித்து இனம் சாராத சொல்லின் கீழ்க் கோடிடுக.


(25) கட்டில், பானை, நாற்காலி, மேசை
(26) குட்டி, கன்று, மூரம், குஞ்சு
(27) கோதுமை, கத்தரி, நெல், குரக்கன்
(28) அன்பு, அடக்கம், பவனி, சினம்.

29 - 31 வரையான வினாக்களுக்கு முதலாவது படத்துடன் நிறைந்த வகையில் தொடர்பு கொண்டிருக்கும் படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


29.



30.



31



32 - 34 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட சொற்கூட்டங்கள் உணர்த்தும் தனிச் சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

32. தானும் உண்ணாமல் பிறருக்கும் கொடுக்காமல் வாழ்பவன்
(கஞ்சன், வள்ளல், அறிவினன்)

33. வேலை செய்யாமல் உணவுக்குப் பிறரை நாடுபவன்
(நோயாளி, சோம்பேறி, வீணன்)



34. பெரிய கப்பல்கள் நங்கூரமிட்டு தங்கி நிற்குமிடம்
(கடற்கரை, பட்டணம், துறைமுகம்)

35-37 வரையான விடுகதைகளை விடுவிக்குக.


35. ஓடுவான் ஆடுவான் ஒற்றைக்காலில் நிற்பான்

36. அண்ணன் தம்பி இரண்டுபேர் அவளைச் சுற்றிப் பன்னிரண்டுபேர்

37. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம்

38-40 வரையான வினாக்களுக்கு முதலாவதாகத் தரப்பட்டுள்ள படத்தை தரப்பட்டுள்ள 4 படங்களில் மூன்றை சேர்ப்பதன் மூலம் உருவாக்க முடியும் வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.


38.



1. முக்கியமானது 2. அவசியமானது
3. அன்றாடம் தேவைப்படுவது

(15) திருவிழாக் காலங்களில் இரவு வேளைகளில் வர்ணக் குடை பிடிப்பது
1. கௌரவத்திற்காக 2. அழகிற்காக 3. வெயிலுக்காக


16-18 வரையான வினாக்களிலுள்ள படங்களில் காண்பிக்கப் படுபவற்றைச் சரியாகக் குறிப்பிடும் வாக்கியத்தின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

(16) 

1. இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெறுகிறது.
2. விளையாடுகிறார்கள்.
3. புதினம் பார்க்கிறார்கள்.

(17) 

1. ஆசிரியர் கதைத்துக் கொண்டிருக்கிறார்.
2. ஆசிரியர் வகுப்பறையில் கற்பிக்கிறார்.
3. அண்ணா பாடம் சொல்லித் தருகிறார்.

(18) 

1. பஸ்சிற்காக காத்து நிற்கின்றனர்.
2. புதினம் கதைக்கிறார்கள்.
3. மருந்தெடுப்பதற்காக வரிசையில் நிற்கிறார்கள்.


19-21 வரையான வினாக்களுக்குப் படத்திற்குப் பொருத்தமில்லாத விடையின் கீழ் புள்ளடியிடுக.


(19) 


(20) 

(21) 

4 படங்களில் மூன்றை சேர்ப்பதன் மூலம் உருவாக்க முடியும் வித்தியாசமான உருவின் கீழ்க் கோடிடுக.

38. 

39 

40. 

**குறிப்பு:**
**விடைகளைவேறு தாளில் எழுதி 09.04.2002 இற்கு முன் எமக்குக்கிடைக்கத்தக்க தாக அனுப்பி வைக்கவும்.**

அன்பு மாணவர்களே உங்களுடைய விடைகளை தபால் மூலம் மட்டுமன்றி நேரிலும் கையளிக்க முடியும். இதன் மூலம் தேவையற்ற தபாற் செலவை தவிர்த்துக் கொள்ளலாம்.

**ஆசிரியர்**

**கல்விப் பகுதி**
**வினாத்தாள் 06**

''வலம்புரி''
இல: 15,வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்:- ..........................................
சொந்த முகவரி:- ..........................................
கற்கும் பாடசாலை:- ..........................................

**இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்**

## இன்று ஒரு தகவல்

# இடது கைப் பெருவிரல்

'இதோ இருக்கிறாரே, இவர் என்னுடைய வலது கை!' என்று சிலரை அறிமுகப்படுத்துவது உண்டு. அப்படியென்றால் என்ன அர்த்தம்? அவரின் உருவம் பார்ப்பதற்கு வலது கை மாதிரி இருக்கிறதென்றா அர்த்தம்? அவரின் தலை இருக்க வேண்டிய இடத்தில் ஐந்துவிரலாஇருக்கும்? அப்படி இல்லை! மிகவும் நெருக்கமானவர்-நம்பிக்கைக்குரியவர் என்று தான் அர்த்தம். அவர் இல்லாமல் நான் இல்லை என்று அர்த்தம். நம்பிக்கைக்கு உரியவர் என்பதைச் சொல்வதற்கு 'வலது கையை' ஒப்பிடுவது வழக்கம்.

ஆனால்... நம்பிக்கைக்கு உரியது வலது கையா? இடது கையா? என்று ஒரு கேள்வி கேட்டால் 'இடது கை' என்று தான் சிலர் பதில் சொல்கிறார்கள். ஏன் தெரியுமா? பத்திரங்கள் எழுதிப் பதிவு செய்கிறோமே அதில் எந்த விரல் ரேகையைப் பதிவு செய்கிறோம். இடது கைப் பெருவிரல் ரேகையைத் தானே. அதனால் இடது கைதான் நம்பிக்கைக்கு உரியதென்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படிச் சொல்கிறவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள்? விரல் ரேகைப் பதிவுக்கூடத்தில் வேலை பார்க்கிறவர்கள் தான்.

அவர்களைச் சந்திப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் என்னுடைய நண்பர் ஒருவருடன் பீச்சில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அந்த நண்பர் ஒரு மாதிரியான ஆள். என்ன கேள்வி கேட்டாலும் எனக்கு தெரியவில்லை என்று சொல்லவே மாட்டார். ஏதாவது ஒரு பதிலைச் சொல்லி வைத்து விடுவார். அது சரியா? தப்பா? என்று யோசிக்கமாட்டார். ஏன் சார்? முக்கியமான ஆவணங்களிலே இடதுகைப்பெருவிரல் ரேகையைப் பதிவு செய்கிறோமே? அது எதனால் என்று அவரிடம் அன்று கேட்டேன்.

வலது கை சாப்பிடுகிற கை, அதில் மை தடவினால் அதைக் கழுவுவதற்கு கஷ்டமாக இருக்கும். அதனால் தான் இடது கை விரலை உபயோகப்படுத்துகிறோம் என்றார்.

சரி! இதற்கு மேல் இவரிடம் பேசவேண்டாம் என்று விட்டுவிட்டேன். அதன் பின் விரல் ரேகைப் பதிவு கூடத்தில் வேலை பார்க்கிற சிலரைச் சந்தித்து விபரம் கேட்டேன். அவர்கள் தான் சரியான தக...

செய்கிறோம். மற்ற நான்கு விரல்களிலும் ரேகைகள் இல்லையா? இருக்கிறது. இருந்தாலும் தாராளமாக இல்லை. மற்ற விரல்களை விட பெருவிரல் பெரிது. அதனால் தான் அதற்கு அந்தப் பெயர்.

மற்ற விரல்களை விடப் பெருவிரலில் அதிகமான விரல் ரேகைக் கோடுகள் இருக்கின்றன. இப்படி அதிகமாக இருப்பதனால் அது நிபுணர்கள் நுணுக்கமாக ஆராய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அதனாற்றான் பெருவிரலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சரி! பெருவிரல் மிகவும் வசதியாக இருக்கிறது. அதற்கு வலது கையிலுள்ள பெருவிரலை மட்டும் உபயோகப்படுத்தினாலென்ன? எதற்கு இடது கையிலுள்ள பெருவிரலை மட்டும் உபயோகப்படுத்துகிறார்கள்.

இதற்கும் ஒரு காரணம் உண்டு. நாம் சாதாரணமாகத் தினசரி வேலைகளுக்கு வலது கையை உபயோகப்படுத்துகிறோம். வலது கையை அதிகமாக உபயோகப்படுத்துவதனாலே அந்தக் கையில் உள்ள விரல் ரேகைகள் தேய்மானம் அடைவதற்குச் சந்தர்ப்பம் அதிகம். அதனால் ரேகைக்கோடுகள் தெளிவில்லாமல் போகலாம். ஆனால் இடதுகையை நாம் அதிகமாக உபயோகப்படுத்தாத காரணத்தால் இடது கைப் பெருவிரல் ரேகையின் கோடுகள் தெளிவாகக்கிடைப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். அதுமட்டுமல்ல... அடிக்கடி உபயோகப்படுத்து வதனால், விபத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பும் வலது கைக்கு அதிகம். இடது கை பாதுகாப்பானது. இதனாலேதான் இடதுகைப் பெருவிரல் ரேகைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

ஒரு ஆள் வந்தான்-அவனுக்கு இடது கையில் கட்டைவிரல் இல்லை. என்னப்பா ஆனது என்று விசாரித்தார் ஒரு பெரியவர். ஒரு மிஷினில் தவறுதலாகக் கையைவிட்டுவிட்டேன் என்றான். 'நல்ல வேளை! வலது கைக் கட்டைவிரல் போயிருந்தால் சாப்பிடவே முடியாமல் போயிருக்குமே!' என்றார் பெரியவர். 'ஆமாம் சார்! முதலில் வலது கைதான் மிஷினில் மாட்டிக் கொள்ள இருந்தது. நீங்கள் சொன்ன மாதிரி நானும் யோசித்துப் பார்த்துவிட்டுத் தான் புத்திசாலித்தனமாச டக்சென்று வலதுகையை...

# தமிழ் புறக்கணிக்கப்பட்டதே தமிழ்ஈழப் போராட்டத்துக்கு காரணம்

### ஜே வி. பி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு

தமிழ் மொழியும் தமிழ் மக்களும் புறக்கணிக்கப்பட்டமையே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தமிழ் ஈழ போராட்டத்துக்கு வழி அமைத்து கொடுத்துள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றவரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்குதொடர்ந்து உரையாற்றுகையி;

தற்பொழுதும் சில தமிழ் பாடசாலைகளுக்கு சுற்றுநிருபங்கள் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுகின்றன.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாணசபை முறைகொண்டுவரப்பட்டது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை.

அதற்குமாற்றாகவேறொரு முறை முன்வைக்கப்படவுள்ளது. அது எத்தகைய முறை என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

மாகாணசபை முறையை மாற்றி சமஷ்டி முறையைக் கொண்டு வருவதற்கே அரசு முயல்கிறது எனவும் அவர் கூறினார். (த)

## கல்வியியற் கல்லூரியின் 2-வது ஆண்டுபூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தேசியகல்வியியற் கல்லூரி இவ்வருடம் மே மாதம் இரண்டாம் வருட சேவையைப் பூர்த்தி செய்கின்றது.

இதனையொட்டி கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருபதுடன் சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது. (உ-19)

## தேர்தல் பணி கொடுப்பனவு

(மந்திகை)

கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கடமையாற்றிய தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்இன்றும் நாளையும் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் வைத்துபி.ப.1.00மணிமுதல் 4.00மணிவரை வழங்கப்படவுள்ளது.

கொடிகாமம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்றும், சாவகச்சேரிக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளையும் வழங்கப்படும் என வலயக்கல்விப் பணிப்பாளர்வ. செல்வராசா தெரிவித்தார். (உ-23)

## விளக்கம் கேட்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

பல்கலைக்கழக மன்றத்தின் அங்கத்தவர்கள சிலரை இராஜினாமா செய்யுமாறு கோரியமை தொடர்பாக விளக்கமளிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரை ஜனாதிபதி கேட்டுள்ளார்.

ஒரு சில பல்கலைக்கழக மன்றத்தின் அங்கத்தவர்களை இராஜினாமா செய்யும்படி கோரியமை தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக மூதவை கவலை தெரிவித்துள்ளது. (த)

### தனியார் பஸ்களுக்கு அனுமதி

## வழங்கப்படாமை பற்றி பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் செல்வதற்கு தயாராக உள்ள தனியார் பஸ்களுக்கு இதுவரை போக்குவரத்து அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெற உள்ள நிலையில்,இதற்கான பயணச் சீட்டுக்கள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும்,

ஆனால், அதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான சேவையில் ஈடுபட 10 தனியார் பஸ்கள் தயாராக இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## மத்தியகிழக்குநிலைகுறித்து இலங்கை ஆழ்ந்த கவலை

(கொழும்பு)

மத்தியகிழக்கில் பாதுகாப்பு நிலைவரம் மோசமடைந்து வருவது குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செய்தியறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

பலஸ்தீன அதிபர் யஸீர்அரபாத்தின் தலைமையகம் மீதான இராணுவ நடவடிக்கைகள் உட்பட சகல வன்முறைகளும் கண்டிக்கப்பட வேண்டியவை.

சமாதானத்தை ஏற்படுத்தும் மாற்றுவழிகள் பல இருக்கும் போது அப்பாவி உயிர்கள் பலியானது கவலையளிக்கிறது.

வன்முறைகளை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு ஐ.நாவின் பாதுகாப்பு சபை கோரியுள்ளது.

அரபு லீக்கின் பெய்ரூட் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சமாதானத்திற்கான நல்ல ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.

இந் நிலையில் நிரந்தரசமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை இலங்கை வரவேற்கிறது. (உ)

## ஏ-9 வீதியில் புதைக்கப்பட்ட 139 கண்ணிவெடிகள்

இருக்கும். அதனால் தான் இடது கை விரலை உபயோகப்படுத்துகிறோம் என்றார்.

சரி! இதற்கு மேல் இவரிடம் பேசவேண்டாம் என்று விட்டுவிட்டேன். அதன் பின் விரல் ரேகைப் பதிவு கூடத்தில் வேலை பார்க்கிற சிலரைச் சந்தித்து விபரம் கேட்டேன். அவர்கள் தான் சரியான தகவலைச் சொன்னார்கள். முதலில் நாம் எதற்காகக் குறிப்பாக பெருவிரல் ரேகையை மட்டும் ஆவணங்களில் பதிவு

பிடவே முடியாமல் போயிருக்குமே!' எனறார் பெரியவர். 'ஆமாம் சார்! முதலில் வலது கைதான் மிஷினில் மாட்டிக் கொள்ள இருந்தது. நீங்கள் சொன்ன மாதிரி நானும் யோசித்துப் பார்த்துவிட்டுத் தான் புத்திசாலித்தனமாசடக்சென்று வ து கையை இழுத்துவுட்டு இடது கையைக் கொடுத்துவிட்டேன்' என்றான் அந்த ஆள். ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

வின் தலைவரை ஜனாதிபதி கேட்டுள்ளார்.

ஒரு சில பல்கலைக் கழக மன்றத்தின் அங்கத்தவர்களை இராஜினாமா செய்யும் படி கோரியமை தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக மூதவை கவலை தெரிவித்துள்ளது. (த)

கைகள் உட்பட சகல வன்முறைகளும் கண்டிக்கப்பட வேண்டியவை.

தானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை இலங்கை வரவேற்கிறது. (உ)

# ஏ-9 வீதியில் புதைக்கப்பட்ட 139 கண்ணிவெடிகள் திங்கள் அகற்றப்பட்டன

(கொழும்பு)

யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் புதைக்கப்பட்டிருந்த 139 கண்ணிவெடிகள் நேற்று முன்தினம் அகற்றப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்னா தெரிவித்துள்ளார்.

முகமாலைப் பகுதியில் இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களில் புதைக்கப் பட்டவையே இக்கண்ணி வெடிகளாகும்.

ஏ-9 பாதை எதிர்வரும் 8 ஆம் திகதி மக்களின் பாவனைக்காக திறந்துவிடப்படவுள்ளதால், மிதிவெடியகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்

# கைதான ஹோமியோபதி வைத்தியர் விடுதலை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் 1998 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட ஹோமியோபதி வைத்தியர் ஒருவரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். சிறிஸ்கந்தராஜா நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளார்.

மட்டக் களப்பு கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த செல்லையா சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரை மலையகத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள மின் மாற்றிகள் பற்றிய தகவல்களைசேகரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். (உ-5)

# நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் மிதிவெடி விழிப்புணர்வு 'நெஞ்சுறுத்தும் கானல்' நாடக ஆற்றுகை இன்று மு. ப. 11.00 மணிக்கு அல்லாரை அ. த. க. பாடசாலை, மீசாலை கமலாம்பிகை ஆகிய பாடசாலைகளுக்கு அல்லாரை அ. த. க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (உ-3)

# கண்காணிப்புக்குழு மட்டு அலுவலகம் இயங்குகிறது

(மட்டக்களப்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கெனதீர்மானிக்கப்பட்ட சர்வதேச கண்காணிப்புக்குழு மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இயங்க ஆரம்பித்துள்ளது.

சர்வதேச கண்காணிப்புக் குழு இயங்க ஆரம்பித்ததிலிருந்து அங்கு யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக 15 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மட்டக் களப்பு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலனை சர்வதேச கண்காணிப்புக் குழு நேற்று சந்தித்துப் பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சிந்தனைக்கு விருந்து

**சீலன் பெற்றோரின் வாயை அடக்குவான்**

தாய்தந்தை வயிற்றைக் கட்டித் தனையனின் கல்விக்கென்றே
தோயும்ஆர் வத்தி னோடே தந்திடும் பணத்தை எல்லாம்
பாயுமோர் வெள்ளம் போலப் பலவழி களில் இறைத்து
வாயடித் தடக்கிப் பெற்றோர் மனம்நோக வைப்பான் சீலன்

தனையன் - மகன்

'பழையவன்'

# ஜனாதிபதி தேசிய அரசு அமைப்பதற்கு

# இணங்காவிடில் அரசியலைத் துறப்பேன்

## முன்னாள் அமைச்சர் பௌசி

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆதரவு கொடுக்க முன்வராவிட்டால் அரசியலில் இருந்து விலகப் போவதாக முன்னாள் போக்கு வரத்து அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலன் கருதி முடிவு காணப்படாதிருக்கும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லாக் கட்சிகளும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடுமுழுவதிலும்பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளார். எல்லாக் கட்சிகளும் இவ்விடயம் குறித்து ஆராய்வதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

இச் சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சிகளும் தமது ஆதரவை அவருக்கு வழங்கினால் பிரதமர் நிலையான ஒரு சமாதானத்தை இந்த நாட்டில் மலரச் செய்வார்.

ஜனாதிபதியோ அல்லது எனது கட்சியோ பிரதமரின் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்காவிட்டால் நான் அரசியலைத் துறந்துவிட்டு எந்தக்கட்சி நாட்டில் சமாதானத்தை அடையப்பாடுபடுகிறதோ அதற்கு எனது தனிப்பட்ட செல்வாக்கை வழங்குவேன் என்று கூறினார். (எ)

### ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு உள்ள

# அனைத்து சலுகைகளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும்

## லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு செல்லும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் ஊடாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் கட்சி பேதமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதனை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்றும் நான்கு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் நடந்த குழு நிலை விவாதத்தின் போது தெரிவித்துள்ளார். (உ-5)

### ஒப்படைகளை ஒப்படைக்குக

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் கற்கைநெறி மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை விரைவாக வெளியிடும் பொருட்டு, அம்மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட செய்முறை ஒப்படைகளை பூர்த்தி செய்து எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி நிறுவன இயக்குநர் கேட்டுள்ளார். (த)

## 50 இலட்சம் ரூபாவை ஒப்படைக்க உத்தரவு

(கொழும்பு)

பவளகாந்தன்கேதீஸ்வரன், ஆறுமுகம் செல்வமோகினி, சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் என்னும் மூவர் 50 இலட்சம் ரூபா பெறுமதியான 18 ஆயிரம் டொலர் பணத்தை எடுத்துக் கொண்டு நாட்டை விட்டு வெளியேறும் தறுவாயில் புலனாய்வுப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு 1999 ஒக்டோபர் 8 ஆம் திகதி சி. ஐ. டீ. பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுக்கெதிரான வழக்கு கொழும்பு மஜிஸ்ரேட் பீ.எச். குணதிலக முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இவர்கள் இப்பணத்தைவெளிநாட்டின் பயங்கரவாத இயக்கத்திற்கு கொடுக்கவிருந்தனர் என்பதற்கு தகுந்த ஆதாரம் எதுவுமில்லாத காரணத்தால் சந்தேகநபர்களிடம் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து சட்டமாஅதிபர் திணைக்களம் மேல் நீதிமன்றத்தில் தடையாணை ஒன்றை பிறப்பித்திருந்தது.

இந்தத் தடையாணை மீதான விசாரணைகொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி மாலின் ரணதுங்க முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி கே. வீ. தவராசா தனது வாதத்தை முன்வைத்தார். சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்தை அவர்களிடம் மீள ஒப்படைக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இச்சந்தேகநபர்கள்சட்ட விரோதமாகபணத்தை கொண்டுசென்று வெளிநாடுகளில் வைத்து இயக்கங்களுக்கு வழங்குவதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணியின்வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி கைப்பற்றப்பட்ட பணத்தை சந்தேகநபர்களிடமே கையளிக்குமாறுசி ஐ. டீ யினருக்கு உத்தரவிட்டார். (உ)

### மாணவன் கொலை பற்றிய

## விபரங்கள் உள்துறை அமைச்சர் கவனத்திற்கு

(கொழும்பு)

பாண்டிருப்பு மாணவன் சதாசிவம் சஞ்ஜீவன் கொலை தொடர்பான விபரங்களை உள்துறை அமைச்சின்கவனத்திற்கு கொண்டு வருமாறு கல்முனை மாவட்ட நீதிபதி கே. தட்சணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே இவ்வழக்கு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், சி.ஐ.டி பணிப்பாளர் ஆகியோருக்கு நீதி மன்றம்உத்தரவிட்டபோதும், இது விடயம் இழுத்தடிக்கப்பட்டுவருகிறது.

தற்போதுபொலிஸ்திணைக்களம் உள்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதால், மனித உரிமைகள் சட்டத்தரணி எம்.கே. பேரின்பராசா இதை அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வருமாறு மனு ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

இதை அடுத்து உள்துறை அமைச்சருக்கு நீதி மன்றம் ஆணையை அனுப்புமாறும் பொலிஸ்மா அதிபர், சி.ஐ.டி. பணிப்பாளர் ஆகியோரை யூன் மாதம் 6 ஆம் திகதி கல்முனை நீதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

மாணவன் சஞ்ஜீவன் கல்முனை பொலிஸ்பாதுகாப்பில் இருந்த போது கடுமையான சித்திரவதை செய்யப்பட்ட பின் சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் பத்திரிகையாளர் பயிற்சி நெறி பயிலும் மாணவர்களின் 'முத்தமிழ்' கலை விழா எதிர்வரும் 7 ஆம்திகதி காலை 9.30மணிதொடக்கம் பி.பி. 5 30 மணிவரைகோப்பாய் ஆசிரிய கலாசாலைமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-3)

## சீருடைத் துணி வழங்க

## இராசி பலன்

4-4-2002

(பங்குனி 21, வியாழன்)
சப்தமி பி.ப.2. 21 வரை
மூலம் மு.ப.11.01 வரை
ராகுகாலம் 1.40-3.10 வரை
நல்லநேரம் 7.40-9.10

**மேடம்**

போசன சுகம், தொழில் முன்னேற்றம், காரிய தாமதம், மனச்சோர்வு.

**இடபம்**

உடல் வியாதி, உறவினர் வெறுப்பு, காரிய தாமதம், போசன சுகம்.

**மிதுனம்**

தெய்வசிந்தை, உறவினர் கலந்துரையாடல், காரிய அனுகூலம், தனவரவு.

**கடகம்**

ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, முயற்சி கைகூடும் செய்தொழில் நன்மை.

**சிங்கம்**

கௌரவக்குறைவு, குடும்பத்தில் மனஸ்தாபம், ரோகம், காரிய தாமதம்.

**கன்னி**

பயந்த சுபாவம், விரும்பாதோர் உறவு, வியாதி, தொழில் கஷ்டம்.

**துலாம்**

கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை, அந்நியர் சந்திப்பு.

**விருச்சிகம்**

